
0332

# பொருளியல்

## நடைமுறைவிடயங்கள்


## 1999

* யூரோ



* இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை
* உயர்நடுத்தர வருமானநாடு

**EMU**





வே. கருணாகரன்
B.A.Hons. Dip in Ed

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் நூலகம். T/300/332

# யூரோ – Euro

"ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள **(EU) 15** உறுப்பு நாடுகளில் **11நாடுகள் ஒன்றிணைந்ததன்** மூலம் புதிதாக உருவாக்கப்பட்ட **"யூரோநிலம்"** என்ற தனியான பொருளாதார வலயத்தின் நாணயமே யூரோ ஆகும்"

**ஆரம்பம்**

1957இல் ரோம் **உடன்படிக்கையில்** யோசனை தெரிவிக்கப்பட்ட ஐரோப்பாவின் பொருளாதார ஒன்றிணைப்புக்கான முயற்சியே தனியொருநாணயம் என்ற கோட்பாட்டின் ஆரம்பமாகும்.

- எனினும் 1969 இல் இடம் பெற்ற ஐரோப்பியத் தலைவர்களின் **கேய்க் உச்சிமாநாட்டின் போதே** இந்த யோசனை முழு அளவில் உறுதியாக்கப்பட்டது.
- இது தொடர்பான தடைகள் அகற்றப்பட்டு 1992ல் ஐரோப்பிய ஒன்றியநாடுகளின் **மாஸ்டிரிச் உடன்படிக்கை** (Maastrecjt Treaty) கைச்சாத்திடப்பட்டு உறுப்பு நாடுகளினால் உறுதி செய்யப்பட்டது.

**அறிமுகம்**

ஐரோப்பிய **நாணய** ஒன்றியத்தினதும் (EMU) யூரோவினதும் முறையான **அறிமுகம் 3 கட்டங்களில்** இடம் பெற்றிருக்கிறது.

- **கட்டம் 1:- 1990 யூலை 1ல்** ஆரம்பம் **மூலதனக்கட்டுப்பாடுகளை** அகற்றுவதிலும், EU விற்குள்ளே **பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக்** குறைப்பதிலும் கவனம் செலுத்தப்பட்டது.
- **கட்டம்: 2:- 1994 ஜனவரி 1ல்** ஆரம்பம் உறுப்பினர் நாடுகளிடையே **இறை மற்றும் நாணய ஒருமுகப்படுத்தல்களை** அடைகின்றதற்கான இலக்கினை ஊக்குவிப்பதனையும் ஐரோப்பிய மத்திய வங்கிக்கு முன்னோடியான **ஐரோப்பிய நாணய(EMU) ஒன்றியத்தை** நிறுவுவதையும் இலக்காகக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கட்டம்:- 3 1999 ஜனவரி 1இல் ஆரம்பம். யூரோவின் குறையான அறிமுகமும், பங்கேற்கும் நாடுகளிடையே மாற்றம் செய்ய இயலாத நிலையான செலாவணி வீதங்களும் நிர்ணயிக்கப்பட்டன.

- யூரோ தாள்களும் குத்திகளும் தேசிய நாணயங்களோடு 2002 ஜனவரி 1 இல் இருந்து கிடைக்கத்தக்கதாக இருக்கும். பங்கேற்கும் நாடுகளின் தேசிய நாணயங்களும் மாற்றத்திற் குட்படுகின்ற 6 மாதங்களுக்குப்பின்னர் 2002யூலை 1இல் இருந்து முற்றாக அகற்றப்படும். அதன் பின்னர் இந்த 11நாடுகளின் தேசிய நாணயங்களும் சட்ட பூர்வ நாணயங்களாக ஏற்றுக கொள்ளப்பட மாட்டாது

15 ஐரோப்பிய ஒன்றிய(EU) நாடுகளில் ஐ.நா. ஒன்றியத்தில் (EMU) இணைந்துள்ள /யூரோவை பொது நாணய அலகாக கொண்டுள்ள 11 நாடுகள்

- அயர்லாந்து, இத்தாலி, இசுப்பையின், ஒசுத்திரியா,
- பின்லாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், போர்த்துக்கல்
- ஜேர்மனி, நெதர்லாந்து, லக்சம்பேர்க்

❁ ஐக்கிய இராச்சியம், டென்மார்க், சுவீடன் என்பன சுயவிருப்பின் பேரில் சேராதுள்ளன.

❁ கிரீஸ் EMU வின் ஒன்றுசேர்ந்த பிரமாணங்களுக்கு இணங்கி ஒழுகாமையால் வெளியேற்றப்பட்டது.
அப்பிரமாணங்களாவன:

1. பணவீக்க வீதம் 1.5% இலும் குறைவாக இருக்கவேண்டும்
2. வட்டிவீதம் 2% இலும் குறைவாக இருக்க வேண்டும்
3. செலவாணி உறுதி 2 வருடங்களுக்காவது பேணப்பட்டிருக்க வேண்டும்
4. அரச வ.செ.தி. பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3% இற்கு மேல் இருக்கக்கூடாது
5. அரச படுகடன் பணவீதம் மொ. உ. உ. இல் 60% இற்கு மேல் இருக்கக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூரோவின் அறிமுகமானது பிறெட்டன்வூட் நிறுவனங்களுக்குப்பிறகு (WB, IMF) **உலகளாவிய நிதியியற்பரப்பின்** நிறுவனரீதியான அபிவிருத்தியில் மிகமுக்கியமான தொரு நிகழ்வாகக் கருதப்படு வதுடன், **உலகளாவிய பொருளாதாரத்தின் மீது பரந்தளவு தாக்கங் களையும்** விளைவிக்கக்கூடும்.

- யூரோ உறுதியானதாக மாறி, சர்வதேசரீதியாக தங்கியிருக்கக் கூடிய நாணயமாகவும், உலகில் மிகப்பெரிய உள்நாட்டு நிதியியல் சந்தையை உருவாக்கக்கூடியதாகவும் இருக்குமாயின் ஐ.நா.ஒன்றியம் (EMU) உலகளாவிய பொருளாதார உறவு களையும், உள்ளார்ந்த ஆற்றல் சமநிலையையும் பாதிப்பது மட்டுமன்றி அவற்றின் தோற்றப்பாட்டையும் மாற்றக் கூடும்.

**இதன் நன்மைகள்**

1. யூரோ நாடுகளிலுள்ள சந்தையின் சிறந்த உள்ளார்ந்த வளமும் ஐ.அ. டொலருக்குஅடுத்ததாக திரவத்தன்மை கொண்டுள்ளமையும் **குறைந்த நிதியிடல் செலவுடன்** யூரோவில் குறித்துரைக்கப்பட்ட **புதிய நிதியியல் கருவிகளின் அபிவிருத்திக்கு** வழங்குக்கக்கூடும்.
2. யூரோ புலப்பாட்டுத்தன்மையையும், செயல்திறனையும் அதிகரிப் பதன் மூலம் **குறுகிய வட்டி வீச்சுக்கான** ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலம் யூரோப்பிராந்திய நிறுவனங்களுக்கிடை யிலான நீண்டகால **ஒப்பந்தங்களின் நட்டங்களை இல்லா தொழிக்கும்**
3. யூரோப்பிராந்தியத்துக்குள் **சந்தை ஒருங்கிணைப்புக்களுக்கு வழி வகுக்கும்**
4. ஐரோப்பிய மத்தியவங்கிக்கு (ECB) பிராந்திய நாடுகளின் பேரண்டபொருளாதார உறுதிபேணும் அதிகாரம் (பணவீக்க வீதம் 2% இற்கு குறைவாக) வழங்கப்பட்டிருப்பதால் **உலகின் எஞ்சிய பகுதிகளிற்கு சாதகமான விளைவுகளை** ஏற்படுத்தும்.
5. உலகளாவிய **வட்டிவீதங்கள் குறைப்பதில்** யூரோவின் தாக்கம் **இலங்கை போன்ற தேறிய மூலதன உட்பாய்ச்சலைக்** கொண்டுள்ள நாடுகளுக்கு நன்மையானது.
6. அத்துடன் யூரோபிராந்தியத்தின் வளர்ச்சி வாய்ப்புக்கள் உயர்ந்தளவு **நேரடிமுதலீடுகளைத்தூண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான வர்த்தகத்தையும் தூண்டும்

## அறைகூவல்கள்/ சவால்கள்

1. இதன் வெற்றி உறுப்பினர் நாடுகளின் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது; நாணய செலாவணி வீத கொள்கைகளின் இறைமையை ஐ. ம வங்கிக்கு (ECB) ஒப்படைப்பதன் மூலம் தனிபொரு நாணய அமைப்பின்பற்றுவதிலிருந்தும் ஐக்கியராச்சியத்தை விலக நிர்ப்பந்தித்தது போல உள்ளது.
2. உறுப்பு நாடுகளின் பொருளாதாரத்தின் மீது செல்வாக்குச் செலுத்த பதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள ஒரே கருவி இறைக் கொள்கையாவதோடு அதுவும் ஒரு முகப்படுத்தப்பட்ட பிரமாணத்திலேயே நிர்வகிக்கப்படுகிறது. எனவே பொருத்தமான கலப்புக் கொள்கை ஒன்றை எய்துவது அறைகூவல் மிக்கபணியாக இருக்கும்.
3. யூரோப்பிராந்திய நாடுகளில் உள்ள தேசிய ரீதியான அமைப்பியல் பிரச்சனைகள் பொதுவான கொள்கை வகுப்பில் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.
4. தொழிலாளர் அசைவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் சில உறுப்பு நாடுகளில் உயர் தொழிலின்மை வீதம் நிலவுகின்றது.
5. நாடுகளிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வு அதிகரிக்கலாம்
6. ஐரோப்பிய நாணய ஒன்றியத்தின் (EMU) எதிர்காலபலமும், உறுதிப்பாடும் உறுப்பினர் நாடுகளின் ஒருமுகப்படுத்தப்பட்ட பேரண்ட பொருளாதார உறுதிப்பாட்டுக்கான கட்டுபாடு, அரசியல்பற்றுறுதி என்பவற்றில் தங்கியிருக்கிறது.

EU வின் முக்கியத்துவம் - 1997 இல்

| நாடுகள் | உலகரீதியான | | |
|---|---|---|---|
| | வெளியீட்டில் | ஏற்றுமதியில் | இறக்குமதியில் |
| ஐரோப்பிய ஒன்றியம் EU | 24 | 39 | 35 |
| ஐக்கிய அமெரிக்கா | 27 | 13 | 16 |
| யப்பான் | 14 | 08 | 06 |

1997இல் EU விற்கான இலங்கையின்

- ஏற்றுமதி 30%
- இறக்குமதி 17%



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EU - European Union (ஐரோப்பிய ஒன்றியம்)
EMU - European Monetary Union (ஐரோப்பிய நாணய ஒன்றியம்)

ECB - European Central Bank (ஐரோப்பிய மத்திய வங்கி)

## வினாக்கள்

1) யூரோ என்பதனால் கருதப்படுவது யாது?
2) "யூரோவை பொது நாணய அலகாக கொண்டுள்ள நாடுகள் எவை?
3) ஐரோப்பிய பொருளாதார ஒன்றியத்தில் அங்கம் வகிக்கின்ற யூரோவை நாணய அலகாக கொள்ளாத நாடுகள் எவை?
4) யூரோவின் அறிமுகத்தால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள், பிரதி கூலங்கள் எவை?
5) யூரோ அறிமுகமானது இலங்கையை எவ்வகையில் பாதிக்கும்?
6) "யூரோ" எதிர்நோக்கும் சவால்கள் /அறைகூவல்கள் யாவை?
7) வேறுபடுத்துக.
   i) யூரோவும் சிறப்பு எடுப்பனவு உரிமையும்
   ii) யூரோவும் ஐக்கிய அமெரிக்க டொலரும்
8) "ஐரோப்பிய நாணய ஒன்றியம்" என்பதனால் கருதப்படுவது யாது

## இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

## *I NDO – SRILANKA FREE TRADE AGREEMENT*

"இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இந்தியக் குடியரசிற்குமிடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை" என்ற உத்தியோகபூர்வ பெயரைக் கொண்ட இந்திய இலங்கை சுதந்திரவர்த்தக உடன்படிக்கை 1998 டிசம்பர 28ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவினாலும் இந்தியப் பிரதமர் ஸ்ரீ அடல்பிகாரி வாஜ்பெயினாலும் கையெழுத்திடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபுடை சுதந்திர வர்த்தக் உடன்படிக்கை
# Bilateral Trade Agreement

"இருபுடை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்பது **குறிப்பிட்ட தொகுதிப்பொருட்களுக்காக எல்லைத் தீர்வைகளைக் குறைப்பது, தீர்வையின்மை** மற்றும் ஓரளவுதீர்வை ஆகிய வழிமுறைகள் மீது **இரு நாடுகளினாலும்** செய்து கொள்ளப்படும் ஒரு உடன்படிக்கையாகும்"

- இதன் முக்கிய **நோக்கம்** முன்னுரிமை வர்த்தகப்பங்காளருடனான வர்த்தகத்தின் மீதான தடைகளை அகற்றுவதன் மூலமாக **நீண்டகால பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும்** மேம்படுத்துவதேயாகும்.
- தீர்வைகளை அகற்றுவது **உடனடியாகவோ** அல்லது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் **படிப்படியாகவோ** இடம்பெறலாம்.
- வர்த்தகத் தடைகளை அகற்றுவதனால்
  - முக்கிய **உள்நாட்டுக்கைத்தொழில்** பெருமளவு பாதிக்கப்படும் என்பதன் அடிப்படையிலும்,
  - **பாதுகாப்புக்காரணங்களின்** அடிப்படையிலும் வர்த்தகம் செய்யத்தக்க சில பொருட்களை உடன்படிக்கையிலிருந்து நீக்கிக் கொள்ளலாம் நீக்கப்பட்ட அத்தகைய பொருட்களின் பட்டியல் **"எதிர்கணியப்பட்டியல்"** (Negative list) என அழைக்கப்படுகிறது.
  - எதிர்கணியப்பட்டியலில் உள்ள பொருட்கள் **சலுகைகளைப்** பெறமாட்டாவெனினும் **வழமையான வர்த்தகமாற்று விகிதங்களில் வர்த்தகம் செய்யப்படுகின்றன.**
- முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் (PTA) நோக்கம் நாடுகளின் சொந்த உற்பத்திகளை மேம்படுத்துவதாக இருப்பதனால் உடன்படிக்கையில் **மூலப்பிரமாணவிதிகள்** கொடுக்கப் பட்டுள்ளன.

இதன்படி உற்பத்தியொன்று **சலுகைகளைப் பெறுவதற்கு**

- அது **முழுமையாக அந்நாட்டிலேயே** பெற்றிருக்கப்பட வேண்டும்.
- அல்லது **மூன்றாவது நாடொன்றிலிருந்து மூலப்பொருட்களை** இறக்குமதி செய்திருக்குமாயின் அது இந்நாட்டிற்குள்ளேயே **கணிசமானளவு உருவமாற்றங்களுக்கு** உட்பட்டிருக்க வேண்டும். உருவமாற்றத்திற்கு உட்படும் அளவு (கூட்டிய பெறுமதி) உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா

- சிலபொருட்கள் மீதான தீர்வைகளை உடனடியாக முழுமை யாக அகற்றவுள்ளதுடன்
- சில பொருட்கள் மீது ஓரளவு சலுகைகளை வழங்கும் அத்தகைய பொருட்கள் மீதான தீர்வை 3 ஆண்டில் படிப்படியாக அகற்றப்படும்.

இலங்கை

- சில பொருட்கள் மீதான தீர்வையை உடனடியாக முழுமை யாக அகற்றவுள்ளதுடன்
- சில பொருட்கள் மீது ஓரளவு சலுகைகளை வழங்கும் அத்தகையபொருட்கள் மீதான தீர்வை 8 ஆண்டில் படிப்படி யாக அகற்றப்படும்

இவ்வுடன்படிக்கை

- ◆ 1994ஆம் ஆண்டின் வர்த்தகம் மற்றும் தீர்வைகளுக்கான பொது உடன்படிக்கையின் (GATT) உறுப்புரை III இல் குறிப்பிடப் பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றியுள்ளது.
    - தகராறுகளைக் களைவதற்கான ஏற்பாடுகளையும் உடன்படிக்கை கொண்டுள்ளது.
    - எந்த ஒரு நாடும் மற்றநாட்டிற்கு ஆறுமாத எழுத்து மூல முன்னறிவித்தல் செய்வதன் மூலம் உடன்படிக்கையை நிறுத்திக்கொள்ள முடியும்
    - இரு நாடுகளின் இசைவுடன் உடன்படிக்கையில் திருத்தங் களைச் செய்யலாம்

- ◆ சுதந்திர வர்த்தகத்தில் இலங்கையின் முதலாவது பங்காளராக இந்தியா தெரிவுசெய்யப்பட்டமைக்கான நியாயங்கள்:

1. புவியியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இலங்கையின் மிக நெருங்கிய அயல்நாடாக விளங்குதல்.
2. இலங்கையின் இறக்குமதிகளின் முதன்மை வழங்குனராக விளங் குதல்
3. மிக அண்மியதன்மை, மிகக்குறைந்த தீர்வைகளைக் கொண்ட வர்த்தகமாக விளங்குதல்
4. அதிகளவு முதலீட்டுத் தொடர்புடையதாக விளங்குதல்
5. இலங்கையில் செய்யப்படும் எந்தவொரு நாட்டின் முதலீடும் இந்தியாச்சந்தையை இலக்குவைத்தே மேற்கொள்ளப்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரணங்கள்/ அனுகூலங்கள்/ சாதகவிளைவுகள்

சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான காரணங்களாக / அனுகூலங் களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

1. **புதிய கைத்தொழில் மயநாடுகளின் அனுபவங்களைக் கொண்டு உயர்ந்த வளர்ச்சி** அடைதல்
   - சுதந்திர வர்த்தக மூலம் **விளைத்திறன், வெளிநாட்டு முதலீடு, தொழில் நுட்பப்பாய்ச்சல், அறிவுபூர்வத்தன்மை** என்பவற்றை மேம்படுத்தி நீண்ட காலவளர்ச்சியை ஏற்படுத்தும்.

2. - அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் வீழ்ச்சிப்போக்கு
   - அந்நாடுகளின் அதிகரித்த வர்த்தகம் பாதுகாப்புத்தன்மை
   - ஏற்றுமதியாளர்களுக்கிடையிலான அதிகரித்தபோட்டி
   - குறைந்துவரும் வெளிநாட்டுதவி

   என்பவற்றின் காரணமாக **ஏற்றுமதியையும், வளர்ச்சியையும்** மேம் படுத்த இத்தகைய **பரஸ்பர ஒத்துழைப்பு** அவசியம்

3. தவிர்க்கமுடியாத **உலகமயமாக்கல்** செயல்முறையிலிருந்தான **அனுகூலங்களை** எதிர்கொள்ள இது அவசியம்
4. பாரிய சந்தையையும் நடுத்தர வருமான உழைப்பாளர்களையும் கொண்ட இந்தியா இலங்கையின் **ஏற்றுமதி விரிவாக்கத்திற்கு** உதவமுடியும்
5. அதிகளவு **வெளிநாட்டுமுதலீட்டைப்பெற** முடிதல்
6. தீர்வைக்குறைப்பு காரணமாக **குறைந்த விலையில்** பொருட் களைப் பெற முடிவதால் **நுகர்வோர் நலன் உயரும்**
7. **ஏற்றுமதியாளர்களும், இறக்குமதியாளர்களும்** பெருமளவு வர்த்த கத்தினை மேற்கொள்வதால் அவர்களின் **வருமானம் அதிகரிக் கும்**
8. **உற்பத்தியாளர்க்கும்** ஏற்றுமதிச்சந்தைவாய்ப்பின் மூலம் **உயர் வருமானத்தை** பெறமுடியும்

## பிரதிகூலங்கள்/ பாதகவிளைவுகள்

1. **உள்நாட்டு உற்பத்தியாளர்** இறக்குமதிப்போட்டிகாரணமாக **நட்ட மடைய** நேரிடலாம்
2. **அரசாங்கமும் தீர்வை வருமானத்தை இழக்க** வேண்டி யிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **தீர்வைக்கு முந்திய விலைகள்** ஏனைய நாடுகளைவிட **இந்தியாவினது உயர்வாக இருப்பின் உலகளாவிய மூலதன ஒதுக்கம், உலகளாவிய நலன் இலங்கை நுகர்வோரின் நலன்** என்பவற்றைப் பாதிக்கும்

## முடிவுரை

உடன்படிக்கை மூலம் நன்மைபெறுவதற்கு இலங்கை **கீழ்க் கட்டமைப்பு வசதிகளை விருத்தி** செய்து கொள்வது அவசியம் இலங்கையின் பொருட்களின் **கூட்டப்பட்ட பெறுமதி தொடர்பான பிரச்சனைகள்** தீர்க்கப்படுதல் வேண்டும். இவ்வுடன்படிக்கைமூலம் **இந்தியப்பொருட்கள் இலங்கையை ஆக்கிரமித்துக்கொள்ளும்** என்றும் **உள்நாட்டுத்தொழில்கள் பாதிக்கப்படும்** என்றும் எதிர் பார்க்கப்படுகின்றது. இரு நாடுகளுக்கும் இடையில் இசைந்து கொடுக்கும் தன்மையைப் பொறுத்தே **இதன் வெற்றி** தங்கியுள்ளது எனலாம்

FTA – Free Trade Agreement
சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

PTA - Preferential Trade Agreement
முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை

FTA - Free Trade Area
சுதந்திர வர்த்தகப்பிரதேசம்

GATT - General Agreement on Tariffs and Trade
வர்த்தகத்திற்கும் தீர்வைக்குமான பொது உடன்பாடு

**வினாக்கள்**

1) "இருபுடைசுதந்திரவர்த்தக உடன்படிக்கை" என்பதனால் கருதப்படுவது யாது?
2) இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்ப தனால் கருதப்படுவது யாது?
3) சுதந்திர வர்த்தகத்தில் முதலாவது பங்காளராக இந்தியா தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணங்கள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) இவ் உடன்படிக்கையினால் இலங்கை அடைந்துகொள்ளும் அனுகூலங்கள் எவை? பிரதிகூலங்கள் எவை?
5) விளக்கக்குறிப்புரை வரைக.
- இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

வினா-விடை

# 1 பொருளாதார அறிமுகம்

1) **சந்தைத்தோல்விக்கான காரணங்கள் யாவை?**

1) வெளிவாரி விளைவுகள்
2) காணாமல் போகும் சந்தைகள்
3) பொதுப்பண்டங்கள்
4) பூரணத்துவமற்ற தகவல்
5) நிறைவில் போட்டி தனியுரிமை

2) **"நிலச்செறிவு உற்பத்தி முறை" என்றால் என்ன?**

சார்பு ரீதியில் ஏனைய உற்பத்திக்காரணிகளிலும் பார்க்க அதிகளவில் நிலத்தைப் பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்ளும் முறையாகும்.

3) **நவீன பொருளாதாரத்தின் இருமாற்று முறைகள் யாவை?**

1. முதலாளித்துவம் - சந்தைமுறை
2. சோஷலிசம் - திட்டமிடல் முறை

4) "சந்தை நட்புடன் கூடிய கொள்கை" **என்பதனால் கருதப்படுவது யாது?**

"அரசாங்கம் சந்தையுடன் பகைமை பாராட்டாது நட்புணர்வுடன் கூடிய ஓர் அணுகுமுறையைப் பின்பற்றி வருதல் - சந்தை நட்புக் கொள்கையாகும்"

❁ சோசலிசத்திலிருந்து சந்தை முறைக்கு மாறும் நிலை மாற்றுப் பொருளாதாரங்கள் இக்கொள்கைகளைப் பின்பற்றுகின்றன.
(உ + ம்) - அரசு ஏகபோகம் ஒழிக்கப்படல்
- பொருளாதாரம் திறந்து விடப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொழில் முனைவோர் தமது ஆற்றலுக்கேற்பத் தொழிற்பட அனுமதித்தல்
- தனியார் தொழில் முயற்சி மீண்டும் தாபித்தல்.
- விலைக்கட்டுப்பாடுகளை நீக்குதல்

5) **உலக வங்கி நிலைமாற்றுப் பொருளாதாரங்களை எவ்வாறு வகைப்படுத்தியுள்ளது?**

1. மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள்:

   (உ + ம்) அல்பேனியா, போலந்து, பொஸ்னியா, பல்கேரியா, ருமேனியா, யுகோஸ்லாவியா, ஹங்கேரி, சொல்வேனியா, மசிடோனியா

2. புதிதாக சுதந்திரம் பெற்ற அரசுகள்:

   (உ +ம்) ஆர்மேனியா, அஸர்பைசான், பெல்ரூஸ், எஸ்தோனியா, ஜோர்ஜியா, லித்துவேனியா, ரஷ்யா, உக்ரைன்

# 4 அரச பொருளாதாரம்

1. ***வரிவிதிப்பின் போது செலுத்தும் ஆற்றலை எவற்றில் அடிப்படையில் நிர்ணயிக்கலாம்?***

   i) **வருமானம் செல்வம்** என்பவற்றின் அடிப்படையில்
   ii) **நுகர்வின்** அடிப்படையில்

2) இலங்கையில் மொத்தப்புரள்வு வரிக்குப் பதிலாக **பொருட்கள் சேவைகள் வரி எதற்காக** நடைமுறைப்படுத்தப்பட்டது?

   1. மொத்தப்புரள்வுவரி அமைப்பின் **இடையிணைப் புத்தாக்கத்தினை ஒழித்தல்** ( திரளும் விளைவு)
   2. வரிச்செலுத்தல்களை மேம்படுத்தல்
   3. வரி அமைப்பின் புலப்படும் தன்மையை மேம்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. G. S. T விலக்களிக்கப்பட்ட பொருட்கள் எவை?
பதனிடப்படாத வேளாண்மை உற்பத்திகள், பொதுப்போக்கு வரத்து, வளாகக்கிகள், சீமெந்து, மருந்தாக்கற்பொருட்கள், பெரும்பாலான அத்தியாவசியப்பொருட்கள்

4) அண்மை ஆண்டுகளில் இலங்கை அரசிறையின் உள்ளமைப்பில் நீர அவதானிக்கும் மாற்றங்கள் யாவை? அவற்றுக்கான காரணங்கள் யாவை?

1. அரசிறையில் வரி அரசிறையின் பங்கு குறைந்துள்ளது.

| | மொத்தஅரசிறையில் | மொ. உ. உ இல் |
|---|---|---|
| 1996 | 89% | 17.0 |
| 1998 | 84 | 14.5 |

2. அரசிறையில் வரி அல்லா அரசிறையின் பங்கு அதிகரித்துள்ளது.

| | |
|---|---|
| 1996 | 11% |
| 1998 | 16% |

**வரி அரசிறையின் பங்கு குறைந்தமைக்கான காரணங்கள்**

1. முதலீடுகளை அதிகரிக்க வழங்கப்பட்ட **வரிச்சலுகைகள்**
2. பொருட்கள் சேவைகள் வரி G. S. T அறிமுகப்படுத்தப்பட்டமை

**வரியல்லா** அரசிறையின் பங்கு அதிகரித்தமைக்கான **காரணங்கள்:**

❀ அரசின் **சொத்து வருமானத்தில்** ஏற்பட்ட அதிகரிப்பு – வட்டி, இலாபம் வாடகை என்பன அதிகரித்தமை.

5. இலங்கை அரசின் செலவின் உள்ளமைப்பு எவ்வாறு உள்ளது?

| | | மொத்தச்செலவின் % |
|---|---|---|
| **நடைமுறைச்செலவு** | | 74% |
| சம்பளங்கள் | 20% | |
| வட்டி | 20% | |
| நடைமுறைமாற்றல் | 18% | |
| ஏனையவை | 16% | |
| **முலதனச் செலவு** | | 26% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❀ பாதுகாப்புச்செலவு – மொ. நடைமுறைச்செலவில் 26%
- மொ.உள்நாட்டு உற்பத்தியில் 5%

6. உற்பத்தித்திறனை உயர்த்துவதற்காக பொதுமுதலீடு இடம் பெறவேண்டிய துறைகள் யாவை?

1. பொருளாதார உட்கட்டுமான வசதிகள்
2. கல்வி
3. சுகாதாரமும் மருத்துவ வசதிகளும்
4. போசாக்கு மட்டவிருத்தி செய்தல்
5. சுற்றுச்சூழல் சீர்கேட்டைத் தடுத்தல்

7. "கல்வி மீதான செலவீடு மனித மூலதனத்தின் மீதான முதலீடாகும்" விளக்கம் தருக.

கல்வி வழங்கப்படுவதால் → ஊழியத்தின் உற்பத்தித்திறன் அதிகரித்து உற்பத்தி அதிகரித்து→ வளர்ச்சி ஏற்படுகிறது

- எனவே கல்வி மனித மூலதனத்தின் மீதான முதலீடாகும்

(குறிப்பு: கல்வி போலவே **சுகாதாரத்தின் மீதான** செலவீடும் மனித முதலீடாகும்)

8. 1990 களில் அரசாங்கச் செலவீட்டில் வீழ்ச்சியை எற்படுத்திய காரணிகள் யாவை?

1. பாரிய அரசமுதலீட்டுத்திட்டங்கள் முற்றுப்பெற்றமை
2. **நட்டத்தில்** இயங்கிய அரச முயற்சிகள் **தனியார் மயப்** படுத்தப்பட்டமை.
3. அமைப்புச்சீராக்கல் திட்டத்தின் கீழ் உற்பத்தி சாராத அரச செலவினம் குறைக்கப்பட்டமை

9. 1997 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.9 சதவீதமாக இருந்த இலங்கை அரசின் **வரவு செலவுத்திட்டப்பற்றாக்குறை** 1998இல் 9.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. இவ் **அதிகரிப்புக்கான காரணங்கள்** யாவை?

1. ❀ உயர்பாதுகாப்புச்செலவுகள் ❀ கூலி அதிகரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❁ நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களுக்கான மாற்றல்கள் என்பவற்றால் அரசின் **செலவு அதிகரித்தமை**

2. ❁ வரிச்சலுகைகள் ❁ பொருட்கள் சேவைகள் வரி அறிமுகப்படுத்தப்பட்டமை என்பவற்றால் அரச **வருமானங்கள் குறைந்தமை**

10. இலங்கையில் அரசிறைப் பற்றாக்குறையைக் குறைக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தப்படுவதேன் ?

1. உயர்பணவீக்கத்தைக் குறைத்தல்
2. உயர் வட்டிவீதத்தைக் குறைத்தல்
3. இவற்றின் மூலம் தனியார் முதலீட்டை ஊக்குவித்தல்
4. சென்மதிநிலுவையின் நிலைத்து நிற்கக்கூடிய தன்மையைப் பாதுகாத்தல்
5. செலாவணித்தேய்வைக்கட்டுப்படுத்தல்.
6. அரசின் பொருளாதாரக் கொள்கையில் தனியார் துறையை நம்பிக்கை கொள்ளச் செய்தல்

# 5. பணம் வங்கி விலைமட்டம்

1) திரட்டப்பட்ட / சீராக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_{2b}$) என்பதனால் கருதப்படுவது யாது?

❁ உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளையும், **வெளிநாட்டு வங்கித்தொழில்** பிரிவுகளையும் உள்ளடக்கிய விரிந்த பண நிரம்பல் $M_{2b}$ ஆகும்

❁ **1998 ஜனவரி** முதல் இலங்கையில் இது கணிப்பிடப்படுகிறது.

❁ இதன் **உள்ளடக்கம்** பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகிறது.

$$M_{2b} = M_2 + QM\ NRFC + RD\ FCBU$$

இங்கு $M_{2b}$ = சீராக்கம் செய்யப்பட்ட விரிந்த பணநிரம்பல்

$M_2$ = விரிந்தபண நிரம்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

QMNRFC – வதிவற்றோரிதன் வெளிநாட்டு நாணயக்கணக்கு களிலுள்ள பொதுமக்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள்
RDFCBU -- வெளிநாட்டு நாணயவங்கி அலகுகளிலுள்ள உள்நாட்டவர்களின் வைப்புக்களின்.

(குறிப்பு: $M_1, M_2$ முன்னர் போலவே கணிப்பிடப்படுகிறது)

2) பின்வரும் தகவல்களின் அடிப்படையில் $M_1$, $M_2$, $M_{2b}$ என்பவற்றைக் கணிப்பிடுக.

I. பொதுமக்கள் வசமுள்ள பணம் (CP) 46000
II. பொதுமக்களுக்குச் சொந்தமான கேள்வி வைப்புக்கள் (DDP) 40000
III. வர்த்தகவங்கிகளிலுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான தவணை சேமிப்பு வைப்புக்கள் ($QM_{DBU}$) 202000
IV) வதிவிடப்பிரசைகள் அல்லாதோரின் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள தவணை சேமிப்பு வைப்புக்கள் ($QM_{NRFC}$) 24000
V) வெளிநாட்டு நாணயவங்கி அலகுகளிலுள்ள உள்நாட்டவர்களின் வைப்புக்கள் ($RD_{FCBU}$) 20000

விடை

- $M_1 = CP + DDP$
  $= 46000 + 40000 = 86000$
- $M_2 = M_1 + QM_{DBU}$
  $= 86000 + 202000 = 288000$
- $M_{2b} = M_2 + QM_{NRFC} + RD_{FCBU}$
  $= 288000 + 24000 + 20000$
  $= 332000$

| | |
|---|---|
| ஒன்றுதிரட்டப்பட்ட விரிந்தபணப்பெருக்கி = | ஒன்றுதிரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் / ஒதுக்குப் பணம் |
| $M_{2b}$ ↑ > ஒதுக்குப்பணம் ↑ ⇒ $M_{2b}$ பெருக்கி↑ | |
| $M_{2b}$ ↑ < ஒதுக்குப்பணம் ↑ ⇒ $M_{2b}$ பெருக்கி↓ | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) வணிகவங்கியின் ஐந்தொகையில் இடம் பெறும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பட்டியலிடுக.

| பொறுப்புகள் | சொத்துக்கள் |
|---|---|
| 1. மூலதனம் | 1. திரவச்சொத்துக்கள் |
| 2. மொத்தவைப்புக்கள் | i) கையிலுள்ள பணம் |
| (i) கேள்வி வைப்புக்கள் | ii) மத்திய வங்கியிலிருந்து வர வேண்டியவை |
| (ii) சேமிப்பு,தவணை வைப்புக்கள் | iii) வெளிநாட்டு நாணயங்கள் |
| | iv) திறைசேரி உண்டியல்கள் |
| | v) திறைசேரிமுறிகள் |
| 3. எடுப்பனவுகள் | iv) வர்த்தக உண்டியல்கள் |
| (i) உள்நாட்டு | 2. முதலீடுகள் |
| (ii) வெளிநாட்டு | i) அரச பிணைகள் |
| | ii) ஏனைய முதலீடுகள் |
| 4. ஏனைய பொறுப்புக்கள் | 3. கடன்களும் முற்பணங்களும் |
| | i) கடன்கள் |
| | ii) மேலதிகப்பற்றுக்கள் |
| | 4. நிலையான சொத்துக்கள் |

குறிப்பு: 1998 மே 18 இலிருந்து "திறைசேரி முறிகள்" திரவச் சொத்துக்களாகக் கருதப்படுகின்றன.

4) வர்த்தக வங்கிகளின் மொத்த சொத்துக்களுக்கான திரண்டதிரவச் சொத்து விகிதம் தற்போது எவ்வாறு (மாறி) உள்ளது?

1998 – 33% (1997 – 40%)

(குறிப்பு : திரவமற்ற சொத்து/ இலாபச்சொத்து 1998 – 67%)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மின்னியல் பணப்பை** = **பிளாஸ்டிக்பண** வடிவமொன்றாக "சிமாட் அட்டையை" இலங்கையில் முதற் தடவையாக 1998 நடுப்பகுதியில் **மக்கள்வங்கி** அறிமுகப்படுத்தியது

- இது காசற்ற சமூகத்தை நோக்கி இலங்கை எடுத்து வைத்த முதலடியாகும்

5) 1998இல் வேளாண்மைகொடு கடனில் ஏற்படுத்தப்பட்ட மூன்று கொள்கை மாற்றங்கள்

1. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கடன் திட்டத்தின் கீழான **கடன்வழங்கல்வீதம் 16% இலிருந்து** 12% ஆக குறைக்கப் பட்டது
2. கடன் வழங்கும் வங்கிகள் தமது நிதிச்செலவில் ஒரு பகுதியை ஈடு செய்யும் வகையில் வேளாண்மைக்கடன்கள் மீதான **வட்டி உதவுதொகை 7.5% இலிருந்து 10%** மாக உயர்த்தப்பட்டது.
3. ஏற்கனவே இருந்த மத்தியவங்கியின் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை நீக்குவதற்காக, அரசின் நிதியிடலுடன் **"வேளாண்மைக்கொடுகடன் உத்தரவாதம்நிதியம்"** உருவாக்கப் பட்டது. -கடன் இழப்புக்களில் 60% வரை இழப்பீடாக வழங்கப்படும்

6) இலங்கையில் நாணயக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் மிகமுக்கிய இடைநிலை இலக்கு எது?
ஒதுக்குட்பணம்/ உயர்வலுநாணயம் / நாணயத்தளம்

7) இலங்கையில் நாணயக்கொள்கையின் முதன்மைக்கருவி எது?
திறந்த சந்தைத்தொழிற்பாடுகள்

8) இரு பிரதான **பேரினப் பொருளாதாக் கொள்கைகளைக்** (கருவிகளை) குறிப்பிடுக.

1. நாணயக் கொள்கை
2. இறைக் கொள்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) "உறுதியான பேரண்டப்பொருளியல் முகாமை ஒன்றுக்கு இந்த இரு கொள்கைகளும் இணையான அளவில் அவசியமாகும்" விளக்கம் தருக.

- பணநிரம்பல் கட்டுப்பாட்டை மீறி அதிகரித்தால் **அரசிறைக் கொள்கை** பிடி தளர்ந்து விடும்.
- அதே போல பணமயமாக்கல் இடம் பெற்று வரும் வழி முறைகளில் இடையூறுகள் தோன்றும் பட்சத்தில் நாணயக் கொள்கையின் பிடி தளர்ந்து விடும்.

எனவே உறுதியான பேரண்டப் பொருளியல் முகாமை ஒன்றுக்கு இந்த இரு கொள்கைகளும் இணையான அளவில் அவசியமாகும்

10) இலங்கை போன்ற **வளர்முகப்பொருளாதாரங்களில் எந்தக் கொள்கை** செயல்தாக்கம் கொண்டது எனக் கருதுகிறீர்? விளக்கம் தருக.
இலங்கை போன்ற வளர்முகப்பொருளாதாரங்களில் காணப்படும் **அமைப்புரீதியான பிரச்சினைகளைச்** சமாளிக்கும் விஷயத்தில் நாணயக்கொள்கையிலும் பார்க்க **இறைக் கொள்கை மிகுந்த** தாக்கம் கொண்டதாக இருக்கின்றது.

11. இலங்கையில் தற்போது நிலவும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பிரதான வழிமுறைகள் யாவை?

1. அரச வ.செ திட்டப்பற்றாக்குறையை அடுத்த 3 வருடத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5% இற்கு குறைத்தல்.
2. உற்பத்தித்திறனை அடிப்படையாகக் கொண்ட கூலிநிர்ணயம்
3. தொழிலாளர் சந்தையை நெகிழ்ச்சியுடைய தாக்குதல்

12. **கொழும்பு மாவட்டநுகர்வோர் விலைச்சுட்டெண்** என்பதால் கருதப்படுவது யாது?

- இது இலங்கை **மத்திய வங்கியினால் 1997 முதல்** கணிப்பிடப்படுகிறது.
- 1996 / 97 நுகர்வோர் நிதி சமூகபொருளாதார அளவீட்டை அடிப்படையாகக் கொண்டது.
- கொழும்பு மாவட்டத்திலுள்ள மிகத்தாழ்ந்த வருமானம் பெறும் 40 வீதத்தினரின் நுகர்வுமாதிரியைப்பயன்படுத்தி **பண்டக்கூடை** தெரிவு செய்யப்பட்டது.
- நெடுநாள் பாவனையற்ற அனைத்து விடயங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 சர்வதேச வர்த்தகமும் நிதியும்

1) சென்மதிநிலுவை என்பதனால் கருதப்படுவது யாது?

"ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில், ஒரு நாடு உலகின் ஏனைய பகுதியுடன் மேற்கொள்ளும் **அனைத்துப் பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்களையும்** (பொருட்கள், பணிகள், வருமானம், மாற்றல்கள், மூலதனம், நிதியியல் சொத்துக்கள், பொறுப்புக்கள்) **முறைப்படி சுருக்கித்தரும் புள்ளிவிபர அறிக்கை** சென்மதி நிலுவையாகும்"

- இக் கொடுக்கல் வாங்கல்கள் **வதிவுடையோருக்கும் வதிவற்றோருக்கும்** இடையிலானவையாகும்.
  - **ஓராண்டிற்கும் கூடுதலாக** நாட்டிலிருக்கும் தனிப்பட்டவர்கள், தொழிற்படும் வெளிநாட்டு நிறுவனங்கள் (இட அமைவு) வதிபவராக கொள்ளப்படுபவர்

2) 1998இல் இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக 9.6 சதவீதத்தினால் தேய்வுற்றபோதும் சிறப்பு எடுப்பனவு உரிமைக்கு எதிராக 13.4 சதவீதத்தினால் பெறுமானத்தேய்வுற்றது இதிலிருந்து நீர் செய்யக்கூடிய முடிவு யாது?
1998இல் முக்கிய நாணயங்களுக்கு (ஸ்ரேளிங்பவுண். மார்க் பிராங், ஜென்) எதிராக டொலர் பெறுமானத்தேய்வுற்றுள்ளது

3) இலங்கையின் பணவீக்கமானது அதனது வர்த்தகப் பங்காளரினதும், போட்டியாளர்களினதும் சராசரிப்பணவீக்கத்தை விட உயர்வானதாகும். இதன் விளைவுகள் யாவை?

1. உலகச் சந்தையில் இலங்கையின் **ஏற்றுமதிப்பொருட்கள் போட்டித்தன்மையை இழந்தமை**
2. போட்டித்தன்மையைப் பேணும் வகையில் **ரூபாவின் பெறுமதித்தேய்வுக்கு** இட்டுச் சென்றமை.
3. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதி இறக்குமதி 70 சதவீதமாகையால் **நாணயப்பெறுமதித் தேய்வு மீண்டும் பணவீக்கத்தை** ஏற்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி

1) உலக வங்கியின் வருமானத்தின் படியான பகுப்பாய்வில் **"தாழ்ந்த நடுவருமான"** நாடாக உள்ள **ஆசிய நாடுகள்** எவை?

இலங்கை, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, சீனா, மாலைதீவு
(வருமான எல்லை ஐ.அ. டொலர் 785 – 3115)

2) அடுத்த பத்தாண்டு காலத்தில் உயர் நடுவருமானம் கொண்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடாக மாறுவது **சாத்தியமானதா?** உமது விடைக்கு விளக்கம் தருக.
இல்லை

- **"உயர் நடுவருமான"** தொகுதியிலுள்ள நாடுகளின் தலா வருமானம் ஐ. அ. **டொலர் 3116 – 9685** என்ற வீச்சிற்குள் காணப்படுகிறது.
- அடுத்த பத்தாண்டுக்காலத்தில் இந்நிலையை அடைவதற்கு இலங்கையின் ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி வீதம் 8.5% மாக உறுதியானநிலையில் பேணப்பட வேண்டும்.
- பொருளாதார வளர்ச்சியில் காணப்பட்ட அண்மைய **மெதுவான போக்கு, உலகப்பொருளாதாரத்தின் வாய்ப்பற்ற தன்மை** என்பவற்றைக் கருத்தில் கொள்கையில் இதனை அடைவது சாத்தியமானதல்ல.
- அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான வெளிநாட்டு உதவிகள் வீழ்ச்சியடைந்து வரும் சூழ்நிலையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு **சலுகை அடிப்படையிலான வெளிநாட்டு உதவி**யினை இலங்கை பெற்றுக்கொள்ள முடியும் போலத் தோன்றவில்லை.
- **உள்நாட்டு முதலீட்டுவீதம் ஏறத்தாழ** 30%ஆக உயர்த்தப்படின் **ஏறத்தாழ 7% பொருளாதார வளர்ச்சியை** படிப்படியாக அதிகரிப்பது சாத்தியமாகலாம்.
- சேமிப்பு வீதங்களில் அண்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு வரவேற்கத்தக்கதாக இருந்த போதும் நடைமுறைக்கணக்கிலுள்ள மிகைகளுக்கூடாக வரவு செலவுத் திட்ட**சேமிப்புக்கள்** திரட்டப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டாலே தவிர அடுத்த 3 **ஆண்டுகளில் உள்நாட்டில் சேமிப்பு வீதத்தை 30%மாக** அல்லது அதற்கு மேல் உயர்த்துவது **சாத்தியமானதல்லை.**

❀ இவ்வரையறையினைக் கருத்தில் கொள்கையில் எதிர்கால அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கான வெளிநாட்டு நிதியிடலின் ஓரளவு தொகையைச் **சர்வதேச மூலதனச்சந்தையிலிருந்து** திரட்டவேண்டியிருக்கும்.

எனவே அடுத்த 10 ஆண்டுக்குள் இலங்கை உயர் நடுத்தர வருமான நாடாக மாறுவது பெருமளவுக்கு **சாத்திய மானதல்ல** எனலாம்.

3) இலங்கையில் **முதலீட்டுவளர்ச்சி குறைவாக இருப்பதற்கான காரணங்கள்** யாவை?

1. **அதிகரித்த பாதுகாப்புச்செலவு** காரணமாக அரச முதலீடு குறைந்தது.

   - ஏனைய விடயங்களில் செலவினைக் குறைத்து பொது முதலீட்டை அதிகரிக்க முடியுமாயினும் **அரசியற்காரணி** அதற்கு இடந்தரவில்லை.

   (உ+ம்) நட்டத்தில் இயங்கும் அரச முயற்சிகளுக்கான மாற்றல்களைக் குறைத்தல்.

2. **பாதுகாப்புத் தொடர்பான நிட்சயமற்ற நிலைமை** உள்நாட்டு தனியார் முதலீட்டை ஊக்கமிழக்கச் செய்தன.

3. நீண்ட காலமாக இலங்கையின் கடன் **வழங்கல் வீதங்கள் 20% க்கும்** உயர்வாகக் காணப்பட்டன. தற்போது வட்டி வீதம் குறைந்த போதும் **உயர்பண வீக்கம்** நிலைம் சூழலில் உயர்வட்டிவீதம் தொடர்பான **மக்களின் மனப்பாங்கு** மாறுவதற்கும், **உண்மை முதலீடு தொடங்கவும் நீண்ட காலம்** எடுக்கும்

4. **1977இல்** வெளிநாட்டு பங்கேற்புடன் ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் மயமாக்கலை உருவாக்கும் நோக்கில், மரபுவழிப் பெருந்தோட்டப் பயிர்கள் உட்பட ஏற்றுமதி சாரா அனைத்துத் துறைகளுக்கும் எதிராகவும் வேறுபாடுகாட்டிய **சிக்கலான முதலீட்டுக்கொள்கையைப் பேணி** வந்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. **உட்கட்டமைப்பு வசதிகள் போதாமை** தனியார் முதலீட்டைக் கட்டுப்படுத்தியுள்ளது.
(உ+ம்) போக்குவரத்து, மின்சாரம், தொலைத்தொடர்பு

6. **வர்த்தக கொள்கைகள்** குறிப்பாக விவசாயம் தொடர்பான நடவடிக்கைகள் **தெளிவானவையாக இல்லை** - இறக்குமதித் தீர்வையை அவ்வப்போது மாற்றுவதும், இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதும் எதிர்காலம் குறித்த நிட்சயமற்ற தன்மையை ஏற்படுத்துகின்றன.

- **விவசாயத்துறைக்கு உரிய பாதுகாப்பு** வழங்கப்படவில்லை எனப்படுகிறது. (தற்போது விவசாயப்பொருட்கள் ஆகக் கூடிய 35% தீர்வைப்பிரிவில் வைக்கப்பட்டுள்ளது)

7. முதலீட்டாளர் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்காத **நெகிழ்ச்சியற்ற** தொழிற்சந்தையும், **கட்டுப்பாடுமிக்க தொழிற் சட்டங்களும்** தனியார் முதலீட்டிற்குத் தடையாக உள்ளன.

4) 1996இல் 15.3 சதவீதமாக இருந்த இலங்கையின் **உள் நாட்டுச்சேமிப்பு வீதம்** 1998இல் 18.9 சதவீதமாக அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்புக்கான **காரணங்கள்** யாவை?

1) தலா வருமானம் அதிகரித்தமை (759 → 837 ஐ.அ டொலர்)
2) நேர்கணிய உண்மை வட்டி வீதங்கள்
(பணவட்டிவீதம் > பணவீக்க வீதம்)

5) கடந்த இரு தசாப்தங்களில் இலங்கையின் **பொருளாதார வளர்ச்சி**பற்றி மதிப்பிடுக.

சராசரி வருடாந்த பொருளாதார வளர்ச்சி:
1980 – 89வரை 4.3%
1990 - 97வரை 5.4%
1998 இல் 4.7 %

* 1980 களைவிட 1990 **களில்** இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் உயர்வாக உள்ளது.
* புதிதாக கைத்தொழில் மயமான நாடுகளின் வளர்ச்சி வீதங்களைவிட இது குறைவானதாகும்.

* தயாரிப்பு , வர்த்தகம், போக்குவரத்து, தொடர்பூட்டல், கட்டடவாக்கம், நிதிப்பணிகள் இவ்வளர்ச்சிக்கு பங்களித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **சேமிப்பு, முதலீட்டுபற்றாக்குறை , கீழ்க்கட்டமைப்புக்கள் போதா மை** போன்றன வளர்ச்சிக்கு தடையாக உள்ளன.
* 1930 களின் உலகமந்தத்தின் பின் முழுஉலகமும் பொருளாதார நெருக்கடியினை அனுபவித்த, பொருளாதார உறுதிப்பாடு பாதிக்கப்பட்டிருந்த **வெளிநாட்டுச்சூழல் ஒன்றில்** 1998இல் இலங்கையின் பொருளாதாரச் செயலாற்றம் **சிறப்பாக** உள்ளது எனலாம்.
- **கிழக்காசிய நாணயநெருக்கடியின்** மத்தியிலும் , 1998 இல் அபி விருத்தியடைந்த நாடுகளுக்காக மதிப்பிடப்பட்ட 2.8% வளர்ச்சி யுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் வளர்ச்சி சிறப்பானதாகும்.

(6) **"ஆசியான் 4"** எனப்படும் நாடுகள் யாவை?

1) இந்தோனேசியா
2) மலேசியா
3) பிலிப்பைன்சு
4) தாய்லாந்து.

(7) ஐ.நா.அபிவிருத்தித்திட்டப்பிரிவு (UNDP) தயாரிக்கும் **மனித வள அபிவிருத்திச் சுட்டெண்ணின் அடிப்படையில் இலங்கை எய்தி புள்ள அபிவிருத்தி பற்றிக் கருத்துரைக்குக.**

* 1997 ல் மனிதவள அபி.சுட்டெண் **0.71**
* மனித வளஅபிவிருத்தி அடிப்படையில் **நடுத்தரமட்டம்**
* ஆனால் **குறைந்த தலாவருமானத்தில்** அடையப்பட்டுள்ள **உயர்ந்த மட்டம்.**
* அதற்கான **காரணங்கள்:-**

**சமூகநல அபிவிருத்திச் செலவீடுகள்** மேற்கொள்ளப்பட்டமை

உ+ம் - இலவசகல்வி
- இலவச சுகாதாரமருந்துவவசதி
- இலவச போசாக்குணவு
- வறியோர் நிவாரணங்கள்

**08) உற்பத்தித்திறன்** என்பதனால் கருதப்படுவது யாது? அதனைத் **தீர்மானிக்கும் காரணிகள்** யாவை?

$$\text{உற்பத்தித்திறன்} = \frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"1 அலகு உள்ளீட்டிற்கான வெளியீட்டினளவு அதிகரித்தல் **அல்லது** 1 அலகு வெளியீட்டிற்கான உள்ளீட்டினளவு குறைதல் உற்பத்தித்திறன் அதிகரிப்பு உற்பத்தித்திறனைத் **தீர்மானிக்கும் காரணிகள்:-**

1) தொழில்நுட்பமுன்னேற்றம்
2) முகாமைத்துவமேம்பாடு
3) மனித மூலதனஅளவு
   - கல்வி, பயிற்சி
4) மூலதனப்பயன்பாடு

9) இலங்கையின் **மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதி இறக்குமதி** 70 சதவீதத்தைக் கொண்டுள்ளது. இது எதனைக் காட்டுகிறது? இலங்கை ஓர் **ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரமாகும்** :- அது சர்வதேச **வர்த்தகத்தில்அதிகளவில்** சார்ந்துள்ளமையை இது காட்டுகிறது.

**தொழிற்படை -- தொழில்வாய்ப்பு -- தொழிலின்மை**

10) கொடுப்பனவு , இலாபம் , அல்லது கொடுப்பனவு வழங்கபடாமல் குடும்ப நலனுக்காக தரவு சேகரிப்பதற்குமுன்பாக ஒருவாரத்தில் ஒருமணித்தியாலம் , அல்லது அதற்குமேல் பணியில் ஈடுபட்டவர் ........................ஆவர் . (தொழில்புரிவோர்)

(11) இலங்கையில் தற்போது தொழிற்படைக்கான ஆகக்குறைந்த வயதெல்லை எவ்வளவு?

10 வயது

(12) தொழிற்படைக்குள் அடங்குகின்ற தொழில் புரிவோருக்குள் அடங்காத பிரிவினர் யார்?

தொழில் தேடுவோர்

(13) தொழில்புரிவோர் = ஊழியர்கள் + .............................. + .............................. + சம்பளம் பெறாத குடும்ப ஊழியர் (தொழில் வழங்குநர் + சுயதொழிலிலீடுபட்டுப்போர்)

(14) ......................= தொழில்புரிவோர் + தொழில் தேடுவோர். (தொழிற்படை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(15) அண்மை ஆண்டுகளில் இலங்கையின் **தொழிற் கட்டமைப்பு** எவ்வாறு மாறி உள்ளது?

| துறை | மொத்தத் தொழில் வாய்ப்பின் வீதம் | |
|---|---|---|
| | 1990 | 1998 |
| விவசாயம் | 45 | 38 |
| கைத்தொழில் | 19 | 15 |
| சேவைகள் | 36 | 47 |

தொழில் வாய்ப்பின் சதவீதம்
- விவசாயத்துறை , கைத்தொழில் துறையில் குறைந்துள்ளது
- சேவைத்துறையில் அதிகரித்துள்ளது.

(16) 1990 இல் 16% ஆக இருந்த தொழிலின்மை வீதம் 1998 இல் 9% ஆக குறைந்துள்ளது. இக்காலப்பகுதியில் **தொழில் வாய்ப்புக்களை வழங்கிய முதன்மைத்துறைகள்** எவை?

தயாரிப்பு, கட்டிடவாக்கம், வர்த்தகம், விடுதிகள் , காப்புறுதி, உண்மைச்சொத்துக்கள், தனியாட்பணிகள்.

(17) **1998ன் தொழிற்படை** மதிப்பீடு முன்னைய ஆண்டின் மதிப்பீடுகளுடன் கடுமையாக ஒப்பிடக்கூடியதல்ல, ஏன்?
இம் மதிப்பீட்டில் குடும்பவருமான உருவாக்கல் செயற்பாடுகளுக்கு உதவி செய்யும் வீட்டுப்பணிப் பெண்கள் போன்ற, **சம்பளம் வழங்கப்படாத பெண் குடும்பத்தொழிலாளர்களும்** தொழிற் படையில் விசேடமாக வேளாண்மைத்துறையில் உள்ளோர் உள்ளடக்கப்படுகின்றனர்.

(18) 1997 இல் 49% மாக இருந்த தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 1998 இல் 52% **மாக அதிகரித்தமைக்கான பிரதான காரணம்** யாது?
பெண்தொழிலாளர் தொழிற்படையில் சேரும் வீதம் உயர்ந்து கொண்டு போதல்.

(19) இலங்கையில் **க.பொ.த. உயர்தரம்** அதற்குமேல் தராதரமுடையவர்களிடையே **தொழிலின்மை வீதம் உயர்வாக** காணப்படுகிறது. இது எதனைக் காட்டுகிறது?
இது **கல்விசார் தகைமைகளுக்கும் தொழில்** வாய்ப்புக்களுக்குமிடையிலான **பொருத்தப்பாடற்ற தன்மையை** எடுத்துக் காட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(20) **வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்குறித்து அரசு வழங்கிய ஊக்குவிப்புக்கள் யாவை?**

1. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தொழிலாளர் நலன் பேண நலன்புரி ஊழியர்கள் நியமிக்கப்பட்டமை.

2. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

- வெளிநாடு செல்லும் தொழிலாளருக்கு தொழிற் பயிற்சி வழங்குதல்
- காப்புறுதித் திட்டம்.
- ஒப்பந்த காலத்தின் முன் நாடு திரும்புபவர்களுக்கு விமானப்பயணச் சீட்டு வழங்குதல்
- பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்குதல்.
- குறைந்த செலவு வீடமைப்புத் திட்டங்களுக்கு நிதியுதவி பளித்தல்

21. பயன்படுத்தப்படாத உள்நாட்டு வளங்கள் கிடைக்காத நிலையிலும், வெளிநாடுகளிலிருந்து அவற்றைத் திரட்டிக்கொள்ள முடியாத நிலையிலும் **முதலீட்டைப் பெறுவதற்கான ஒரே வழியாது?**

தற்போதைய நுகர்வைக் குறைத்தல் ஆகும்.

22. கடந்த பத்தாண்டுகாலத்தில் இலங்கையின் **வருமானப்பரம்பலில்** ஏற்பட்ட மாற்றம் என்ன? தரவுகள் மூலம் உமது விடையை விளக்குக.

| சனத்தொகையின் வீதம் | வருமானத்தின்சதவீதம் | |
|---|---|---|
| | 1987 | 1997 |
| உயர்செல்வந்த 20%னர்<br>மிக வறிய 40% னர் | 57%<br>11% | 53%<br>13% |
| கினிகுணகம் | 0.46 | 0.43 |

- செல்வந்தர் வருமானத்தில் பெறும்பங்கு **குறைந்துள்ளது.**
- வறியவர் பெறும் பங்கு **அதிகரித்துள்ளது**
- வருமானப்பரம்பலில் ஒரு **முன்னேற்றம்** ஏற்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. இத்தகைய மாற்றத்திற்கு பங்களித்த **காரணிகள்** எவை எனக் கருதுகின்றீர்?

1. சார்புரீதியில் விரைந்த பொருளாதார **வளர்ச்சியினூடாக** பரந்தளவு **தொழில்வாய்ப்பு** உருவாக்கப்பட்டமை
2. அரசின் நலன்புரித்திட்டங்கள் சிறப்பாக **இலக்கிடப்பட்டமை**
3. குறைந்த வருமானக் குழுக்களுக்கு தாராள □ மயமாக்கலின் நன்மைகள் சென்றடைந்தமை
4. வெளிநாட்டில் தொழில் புரிவோர் பண அனுப்பல்கள்

**24.“மிகவும் வறியர்கள் வங்கியிடத்தக்கவர்களல்லர் அல்லது நம்பத்தகுந்தவர்கள் அல்லர்”** என முறைசார் வங்கிகள் கருது வதற்கு காரணம் என்ன?

இவர்கள் முறைசார்வங்கிகளினால் **ஏற்றுக்கொள்ளப்பட்ட** கடன் **வழங்கல்** மற்றும் கடனை **மீளப்பெறும் நடைமுறைகளுடன் நெருங் கிய தொடர்புகளைக் கொண்டிருக்காமையால்** வங்கியிடத்தக்க வர்களல்லர் எனக் கருதப்படுகின்றர்

- எதிர்பார்க்கப்படும் கடன் ஒழுங்குகளை, பிணைகளை கொண்டிராத மையால் இவர்கள் நம்பகரமற்றவர்களாகக் கருதப்படுகின்றனர்.

**25.“சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன்திட்டம் (இசுறு)”** என்பது பற்றி சுருக்கமாக விளக்குக.

- 1989 **இல் வேளாண்மை அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம், கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை, இலங்கை அரசு, இலங்கை மத்தியவங்கி** ஆகியவற்றால் விஷேச **வறுமை ஒழிப்புத்திட்டமாக** இது நடைமுறைப்படுத்தப்பட்டது.
- வறுமை செறிந்து காணப்பட்ட **கண்டி, புத்தளம், காலி, மாத்தறை**, ஆகிய 4 மாவட்டங்களில் இது நடைமுறைப்படுத்தப் பட்டது.
- “கிராமத்துக்கு மாற்று **முகவரொருவரை** நியமித்து, இலக்கிடப் பட்ட நன்மை பெறுபவர்கள் தாமாகவே ஒத்த வறுமைச்சூழலைக் கொண்ட மக்களை உள்ளடக்கிய **சுய உதவிக்குழுக்களை** அமைத்துக் கொள்ள ஊக்குவிப்பதே” இந்தத்திட்டத்தின் **குறிக்கோளை** அடையப் பயன்படுத்திய **உபாயமாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சுய உதவிக்குழுக்கள்:

i) வங்கிகளின் நிர்வாகச் செலவைக் குறைக்கவும்
ii) ஏனைய அங்கத்தினரின் பரஸ்பர உத்தரவாதத்தின் மூலம் பிணை உத்தரவாத குறைப்பிரச்சினையைத் தீர்க்கவும் உதவின

- இவற்றின் கீழ் கடன் மீளப்பெறுகை வீதம் மிக உயர்வாக (94%) காணப்பட்டமை குறிக்கோளை அடைவதில் இதன் வெற்றியைக் காட்டுகின்றது.
- 1997இறுதியில் வெளிநாட்டு நிதி வழங்கல் நிறுத்தப்பட்டவுடன் மத்திய வங்கி பொறுப்பேற்றுள்ளது.
- தற்போது நன்மைபெறுநர் சங்கங்களை சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்து முறைசார் நிறுவனங்களாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

## உசாத்துணைகள் - References


1) Finance & Development – December 1998
- By The International Monetary Fund P.2-15
2) இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் - 1997, 1998
3) பொருளியல் நோக்கு – ஜனவரி, மார்ச், ஏப்ரல் -மே 1999
– மக்கள் வங்கி வெளியீடு
4) வரவு செலவுத்திட்ட உரை - 1999
5) சஞ்சீவி 09.01.1999. பக் iii
6) தினக்குரல் 01.01.1999, 03.01.1999 பக் 3, 20
7) Daily News – 31.12.1998 P.9 , 01.01.1999 P.11, 18.01.99 P.9; 16
8) Weekand Express – 22.05.1999 P.14



கொம்பியூட்டர் கங்கை பிறின்ட்

கங்கை றோணியோ
(பிறவுண் வீதிக்கு அருகாமையில்)
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org